தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**09.07.2013**

**தமிழகம் மற்றும் புதுவையில் நாளை மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் நாளை(செவ்வாய்க்கிழமை) ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.மேலும் சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் இன்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் திருவாரூரில் 40 மி.மீ. மழை பெய்துள்ளது. காரைக்கால், நீடாமங்கலம், பாபநாசம், செங்கல்பட்டு, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் 30 மி.மீ. மழை பெய்துள்ளது. சென்னை, வால்பாறை, வலங்கைமான், திருவிடைமருதூர், உத்திரமேரூர், கல்பாக்கம், மாகபலிபுரம் (20 மி.மீ.), சின்னக்கல்லாறு, கும்பகோணம், காஞ்சிபுரம், குளச்சல், ராசிபுரம், நடுவட்டம், நன்னிலம், மதுராந்தகம், ஸ்ரீபெரும்புதூர், எண்ணூர் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை**

கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. கடலூரில் அதிகபட்சமாக 46 மி.மீ. மழை பதிவானது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து விட்டது. அதனால் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டதால் நெல் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது.

விவசாயிகள் மாற்றுத் தொழிலைத் தேடினர்.

இந்நிலையில், தென்மேற்குப் பருவமழை தொடங்கி தென் மாவட்டங்களில் நல்ல மழை பெய்து வருகிறது.

இதன் மூலம் கர்நாடக மாநிலத்தில் கனமழை பெய்து அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

தென்மாவட்டங்களில் பெய்து வரும் பருவமழை மேகமூட்டங்கள் காற்றின் வேகத்தால் வடமாவட்டங்களுக்கு அடித்து வரப்படுகின்றன.

இந்த மேகமூட்டத்தால் கடலூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் ஆங்காங்கே பரவலாக மழை பெய்து வருகிறது.

சனிக்கிழமை இரவு 9 மணிக்கு தொடங்கிய மழை விடிய விடிய பெய்தது. மாவட்டத்தில் பெய்த மழையளவு விவரம் (மி.மீ):

கடலூர் 46.4, வானமாதேவி 39.20, அண்ணாமலைநகர் 17.20, சேத்தியாதோப்பு 1.50, மேமாத்தூர் 10, பண்ருட்டி 8.30, பரங்கிப்பேட்டை 5, சிதம்பரம் 7 மி.மீ மழை பெய்துள்ளது.

இதனால் விதைப்பு செய்யும் விவசாயிகள் நிலத்தை தயார் செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

**பலத்த காற்றுடன் கூடிய மழை**

செங்கல்பட்டில் ஞாயிற்றுக்கிழமை இரவு பலத்த காற்றுடன் பெய்த மழையால் சில இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன.

ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த மழையின்போது பலமான காற்று வீசியது. இதனால் சில இடங்களில் சாலைகளில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அண்ணாநகர் 9-வது குறுக்குத் தெருவில் ஒரு மரம் முறிந்து

விழுந்தது. இதனால் மின்சார வயர் அறுந்து விழுந்தது. இதைத்தொடர்ந்து மின்துண்டிப்பு செய்யப்பட்டது. இதனால் அங்குள்ள குடியிருப்புகளில் மின்சாரம் தடைபட்டது. இரவு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டதால் மக்கள் அவதியுற்றனர். திங்கள்கிழமை பகல் 12 மணியளவில் மரம் அப்புறப்படுத்தப்பட்டு, மின்கம்பங்களை மாற்றி மின்சாரம் சீரானது.

**விவசாயத் தொழிலாளர்கள் முற்றுகை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட கூலியை வழங்கக் கோரி ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

மகாத்மா தேசிய ஊரக வேலை உறதித் திட்டத்தில் நாளொன்றுக்கு கூலியாக ரூ.148-ஐ அறிவித்தது. ஆனால், பல பகுதிகளில் ரூ.30 முதல் கூலி வழங்கப்பட்டு வருகிறது.

எனவே அரசு அறிவித்தபடி, கூலி வழங்க வேண்டும் என வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டக் குழு உறுப்பினர் பாலாஜி தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் கோதண்டன், மாவட்டத் துணைத்தலைவர் பன்னீர்செல்வம், காக்கவாக்கம் ஊராட்சித் தலைவர் சாந்தி மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் அத்தங்கிகாவனூர், தாமரைப்பாக்கம், திருக்கண்டலம், பூரிவாக்கம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து அவர்கள் கலைந்துச் சென்றனர்.

**விவசாயிகள் கருத்தரங்கம்**

மானாமதுரையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.

விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டை விளக்கி நடைபெற்ற இக் கருத்தரங்குக்கு இச்சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் வீரபாண்டி தலைமை வகித்தார். பொருளாதார நிபுணர் வெங்கடேஷ் ஆத்ரேயா கருத்தரங்கில், மாறி வரும் இந்திய விவசாயமும், நெருக்கடிகளும்-தீர்வும் என்ற தலைப்பில் பேசினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் முகமதுஅலி சிறப்புரையாற்றினார்.

சிவகங்கை நகர்மன்றத் தலைவர் அர்ச்சுனன், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ஆதிமூலம், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் ஏ.ஆர்.கே. மாணிக்கம், ஒன்றியச் செயலர் முத்துராமலிங்க பூபதி, நகர்ச் செயலர் சங்கரசுப்ரமணியம், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாவட்டச் செயலர் சாந்தி உள்ளிட்டோர் கருத்தரங்கில் பங்கேற்றனர். ஒன்றியச் செயலர் ஆண்டி நன்றி கூறினார்.

**விவசாய நிலங்களை மனைகளாக மாற்ற சட்ட விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்**

விவசாய நிலங்களை மனைப்பிரிவுகளாக மாற்ற சட்ட விதிமுறைகள் அனைத்தையும் உறுதியாக கடைப்பிடிக்க வேண்டும் என சமூக விழிப்புணர்வு இயக்கம் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறை தீர் முகாமில், சமூக விழிப்புணர்வு இயக்கத்தின் நிறுவனர் ஜே.டி.சாக்ரடீஸ்

அளித்த மனு விவரம்:விவசாய நிலங்களை வீட்டுமனைப் பிரிவு பயன்பாட்டிற்கு மாற்றக்கூடாது என்று அரசு கொள்கை ரீதியாக அறிவித்துள்ளது. ஆனால், தவிர்க்க முடியாத நிலப் பயன்பாடு மாற்றத்திற்கு என்று சில விதிமுறைகளை வகுத்து சட்டம் இயற்றியுள்ளது.

ஆனால், கோவை உள்ளூர் திட்டக் குழும அதிகாரிகளும், நகர ஊரமைப்புத் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் சட்டத்தை மதிக்காமல் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபடுவோருக்கு நிலப்பயன் மாற்ற அனுமதி கொடுத்து வருகின்றனர்.நிலப்பயன் மாற்றம் குறித்து ஆட்சேபணைகள் தெரிவித்தால், அந்த ஆட்சேபணைகள் உள்ளூர் திட்டக் குழுமத்தால் பரிசீலனை செய்யப்படுவதில்லை. விவசாய நிலங்களை விவசாயத்திற்கு உபயோகம் இல்லாத நிலம் என்றும், பல ஆண்டுகளாக விவசாயம் நடைபெறுவதில்லை என்றும், கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் அதிகாரி, வட்டாட்சியர்களால் கொடுக்கப்படும் பொய்யான அறிக்கை காரணமாக விதிமுறைகளை மீறி நிலப்பயன் மாற்ற அனுமதி கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

**அந்தியூரில் ரூ.1 கோடிக்கு பருத்தி ஏலம்**

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் கொண்டு வந்த 6 ஆயிரம் மூட்டைகள் பருத்தி ரூ.1 கோடிக்கு ஏலம் போனது.

அந்தியூர் விற்பனைக் கூடத்தில் பருத்திக்கு நல்ல விலை கிடைப்பதால் சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் 6 ஆயிரம் மூட்டை பருத்தியினை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர் . இதில், சுரபி ரக பருத்தி குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக ரூ.5100-க்கும், அதிகபட்சமாக ரூ.5400-க்கும் ஏலம் போனது.

பிடி காட்டன் ரக பருத்தி குவிண்டால் ரூ.4090 முதல் ரூ.5200 வரை ஏலம் போனது. பெருந்துறை, ஈரோடு, அன்னூர் உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பஞ்சாலைகள், வியாபாரிகள் பருத்தி கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டினர்.

**பாபநாசத்தில் 29.2 மி.மீ. மழை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக பாபநாசத்தில் 29.2 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

பாபநாசம் 29.2, திருவிடைமருதூர் 21, அய்யம்பேட்டை 16, கும்பகோணம், மஞ்சலாறு தலா 14.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 57.05 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 57.05 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 20,901 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,136 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**"பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்'**

விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்படுவதற்கு ஏற்ப மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதில் அலுவலர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார் தமிழக அரசின் சத்துணவு திட்ட செயலர் பி.எம். பஷீர் அகமது.

நாகை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அரசு செயலர் (சத்துணவு) பி.எம். பஷீர் அகமது அண்மையில் ஆய்வு மேற்கொண்டார்.

நாகை அரசு மருத்துவமனையில் தமிழக அரசின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சைப் பெறும் உள்நோயாளிகள் பிரிவை பார்வையிட்ட அவர், நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலவாஞ்சூர் ஊராட்சியில் பசுமை வீடுகள் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் சக்தி கட்டமைப்புகளைப் பார்வையிட்ட அவர், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் பழுது நீக்கம் ஆகியன குறித்துக் கேட்டறிந்தார்.

திட்டச்சேரி அரசு உயர்நிலைப்பள்ளியில் அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் ரூ. 50 ஆயிரம் மதிப்பில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்காக கட்டப்பட்ட கழிப்பறையைப் பார்வையிட்ட அவர், வகுப்பறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்குப் பாடம் கற்பிக்கும் முறையை ஆய்வு செய்து, கூடுதல் பயிற்சி அளிக்க அறிவுறுத்தினார்.

பின்னர், பள்ளி மாணவ-மாணவிகளுக்குப் பரிமாறப்பட்ட சத்துணவை ஆய்வு செய்தார். ஆய்வுகளுக்குப் பின்னர், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான வளர்ச்சிப் பணிகள் மேம்பாடு குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பஷீர் அகமது பங்கேற்றார்.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஆர். சங்கர், முதன்மைக் கல்வி அலுவலர் மா. ராமகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பிருத்விராஜ், வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நாட்டுக் கோழிப் பண்ணைக்கு மானியம்**

அரசு மானியத்தில் நாட்டுக் கோழிப்பண்ணைகள் அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

இத்திட்டத்தில் கோழிக் கொட்டகை அமைக்க, கோழிக் குஞ்சுகள், தீவனம் மற்றும் கருவிகள் வாங்க முதல் தவணையாக 25 % மானியத்தில் ரூ.29,250 வழங்கப்படும். திட்டத்தின் இறுதியில் 25 % மானியத் தொகை வழங்கப்படும்.

ஆதிதிராவிடர்களுக்கு 33 % மானியத் தொகை நபார்டு வங்கி மூலம் வழங்கப்படும்.

முதல் தவணை கோழிக் குஞ்சுகள் 100 % மானியத்திலும், 2-வது தவணை கோழிக் குஞ்சுகள் 50 % மானியத்திலும், மூன்றாவது தவணை கோழிக் குஞ்சுகள் 30 % மானியத்திலும் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 5 நாள்கள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும். இத்திட்டம் கிராமப்புற பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்படவுள்ளது.

12 முதல் 14 வார காலத்துக்குள் நாட்டுக் கோழிகள் விற்பனை செய்யும் அளவுக்கு வளர்ந்துவிடும் என்பதால், ஒரு ஆண்டில் 14 வார சுழற்சியில் 3 தவணையில் கோழிகள் வளர்க்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நாகை மாவட்டத்தில் நாட்டுக் கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள், அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்கள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கிகளில் ஜூலை 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் அறிவியல் நிலைய குட்டைகளில் 2 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்க முடிவு**

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலைய குட்டைகளில் 2 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கத் திட்டமிட்டுள்ளதாக நிலையத் தலைவர் ஏ. சுரேஷ் தெரிவித்தார்.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஏ.சுரேஷ், நிலையத்தில் மீன் வளர்ப்புக்கென உள்ள குட்டைகளை சனிக்கிழமை நேரில் பார்வையிட்டார். நிலையத்தில் ஏற்கெனவே மீன் வளர்ப்பு செய்யப்பட்டது குறித்தும், மீன் வளர்ப்புப் பயிற்சி மக்களுக்கு அளிப்பது குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் வளர்ப்புக்கென 5 குட்டைகள் உள்ளன. எல்லா குட்டைகளும் கான்கிரீட் முறையில் சுற்றுச்சுவர் எழுப்பி நல்ல முறையில் உள்ளன. இதில் ஒரு குட்டையில் மட்டுமே தற்போது மீன் வளர்க்கப்படுகிறது. இதைக் கொண்டே காரைக்காலைச் சேர்ந்தவர்களுக்கு மீன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிலையத்தில் உள்ள 5 குட்டைகளிலும் தண்ணீர் நிரப்பி பல்வேறு வகையான மீன் குஞ்சுகள் வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, கெண்டை மீன் வகைகளில் கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளி உள்ளிட்டவை வளர்ப்பு செய்யப்படும். ஒரு குட்டையில் தனியாக கெண்டையில் புதிய வகையான போட்லா என்கிற வகை வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவை மொத்தம் 2 லட்சம் குஞ்சுகள் விடப்படவுள்ளன. இதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து மீன் குஞ்சுகள் வாங்கிவரப்படவுள்ளது. இதன் நோக்கமே, காரைக்கால் பகுதியினருக்கு மீன் வளர்ப்பு குறித்து நேரடி பயிற்சி அளிப்பதும், மீன்களை விற்பனை செய்வதன் மூலம் நிலையத்தின் வருவாயை உயர்த்துவதுமேயாகும்.

நிலையத்தில் சுமார் 60 ஏக்கர் நிலம் உள்ளது. சிறிய அளவு இடத்தைக்கூட பயன்படாத இடமாக வைத்திருக்காமல், பல்வேறு விதமான பயிர் உற்பத்தியில் நிலையத்தார் ஈடுபட வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உற்பத்திக்காகும் செலவுத் தொகை புதுச்சேரி அரசு மூலம் பெறப்படும் என்றார் சுரேஷ்.

**வறட்சி நிவாரணம்: பட்டியல் தயார்**

காரைக்கால் மாவட்டத்தில் வறட்சி நிவாரணம் பெறும் விவசாயிகளின் பட்டியல் தயார் நிலையில் உள்ளதாக வேளாண்துறை அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் புதன்கிழமை கூறியது: கடந்த ஆண்டு குறுவை, சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டபோது, வேளாண் துறை அந்தந்த பகுதி வேளாண் அலுவலர் மூலம் பாதிப்பு விவரங்களை சேகரிக்கத் தொடங்கியது.

நிவாரணம் பெற தகுதியான பயனாளிகள் பட்டியல் தயார் செய்து அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவிட்டது. அரசு தொகையை விடுவித்தவுடன் விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணி தொடங்கும் என்றார்.

**17 கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்துவிட விவசாயிகள் வலியுறுத்தல்**

திருச்சி மாவட்டத்திலுள்ள 17 கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விட வேண்டும் என தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன் மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனு:

குறுவை சாகுபடிக்கு ஜூன் 12-ம் தேதி வழக்கமாக தண்ணீர் திறக்கப்படும். காவிரியில் தண்ணீர் இல்லாததால், இந்த ஆண்டும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

திருச்சி மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, மல்லிகைப் பூ என ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களில் விவசாயம் செய்யப்படுகிறது.

காவிரியில் நீர் இல்லாததாலும், போதிய மழை இல்லாததாலும் நிலத்தடி நீர்மட்டம் அதளபாதாளத்துக்கு சென்றுவிட்டது.

விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் கிடைத்தும், ஆழ்குழாயில் தண்ணீர் இல்லாததால் மின் மோட்டார்களை இயக்க முடியாமல் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை.

வாய்க்கால்களும் ஏரிகளும் வறண்டு கிடக்கின்றன. எனவே, திருச்சி மாவட்டத்திலுள்ள 17 கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டும். மேலும், உழவர் அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு தாமதமின்றி அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டாஸ்மாக் மதுக்கடைக்கு எதிர்ப்பு: எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் அளிக்கப்பட்ட மனு:

திருச்சி மாநகராட்சி 40-வது வார்டு எடமலைப்பட்டிபுதூர் புங்கே நிறுவனத்துக்கு எதிரே புதிய டாஸ்மாக் மதுக்கடை திறக்கப்படவுள்ளதாக அறிகிறோம். அருகிலேயே பள்ளிகள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. எனவே, இங்கு மதுபானக் கடை அமைக்கக் கூடாது. திறக்கப்பட்டால் போராட்டங்கள் நடத்தப்படும்.

**கார்சாகுபடிக்கு தண்ணீர் திறக்கக் கோரி 12-ல் ஸ்ரீவைகுண்டத்தில் மறியல்**

தாமிரவருணி மருதூர் மேலக்கால், கீழக்கால் பாசனத்தில் கார்சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தி வரும் 12-ம் தேதி ஸ்ரீவைகுண்டத்தில் சாலை மறியல் போராட்டம் நடைபெறுகிறது.

தாமிரவருணி மருதூர் மேலக்கால், கீழக்கால் பாசன விவசாயிகள் பாதுகாப்பு போராட்டக்குழுக் கூட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்றது. மருதூர் மேலக்கால் நீர்பகிர்மானக் குழுத் தலைவர் அலங்காரம் தலைமை வகித்தார். மருதூர் கீழக்கால் நீர்பகிர்மானக் குழுத் தலைவர் சீனிபாண்டியன், மேலக்கால், கீழக்கால் பாசன விவசாயிகள் போராட்டக் குழுத் தலைவர் கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், பாபநாசம் அணையில் 120 அடி தண்ணீர் உள்ள நிலையில் தாமிரவருணி மருதூர் மேலக்கால், கீழக்கால் பாசன விவசாயிகளுக்கு கார்சாகுபடிக்கு தண்ணீர் திறக்கக் கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத பொதுப் பணித்துறையை கண்டித்தும், கடந்த காலங்களில் பாபநாசம் அணையில் 40 அடி தண்ணீர் இருந்த

நிலையில் கார்சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டதை முன் உதாரணமாக கொண்டு உடனடியாக கார்சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தியும் 12-ம் தேதி காலை 10 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் புதுக்குடியில் திருநெல்வேலி-திருச்செந்தூர் சாலையில் மறியல் போராட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. கணபதி நன்றி கூறினார்.

விவசாய சங்கப் பிரதிநிதிகள் வசவப்பப்புரம் துரை, பக்கபட்டி பண்டாரம், கெட்டியம்மாள்புரம் ராஜகோபால், வெள்ளூர் கொம்பையா, ஆறுமுகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் இன்று ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.இந்த நிலையில் திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் திருவாரூரில் 40 மி.மீ. மழை பெய்துள்ளது. சென்னை, மகாபலிபுரம் (20 மி.மீ.)ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**பெய்தால் அழிவு... பொய்த்தால் அவதி!**

ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே புய வீக்கத்திலே உயர் நோக்கத்திலே காக்கத்திறல் கொண்ட மல்லர்தம் சேனைக் கடலினிலே உயர் நாடு" என்றார் மகாகவி பாரதி.

உலகிலேயே எளியோரும், வலியோரும் ஒரே நிலையில் பாதுகாப்புடன் வாழத் தகுதிவாய்ந்த தர்ம தேசமாக பாரதம் விளங்குவதையே அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதையே விவேகானந்தரும் "உலகுக்கு பாரதம் வழிகாட்டும்' என முன்மொழிந்துசென்றார்.

ஆனால், நமது தேசம் தற்போது சந்தித்துவரும் பிரச்னைகளை ஆராய்ந்தால் நாம் நமது முன்னோர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் செயல்படுகிறோமா என்ற கேள்வியே எழுகிறது.

தமிழகத்தின் வறட்சிப் பகுதியை மத்திய குழு பார்வையிட்டுச் சென்ற நேரத்தில்தான் உத்தரகண்டில் மழை வெள்ளத்தில் ஆயிரக்கணக்கானோர் மடிந்து போகிறார்கள்.

நீலகிரியில் மழை வெள்ளத்துக்குப் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கும் நேரத்தில் மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களின் பல பகுதிகளில் குடிநீருக்காக காலிக் குடங்களுடன் பெண்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

சுதந்திரமடைந்து இத்தனை காலமாகியும் நமது அடிப்படைத் தேவைகளைக் கூட அனைவரும் சமமாகப் பெறும் சூழலை உருவாக்கவில்லை என்றால், நமது நிர்வாகத் திறனை என்னவென்று சொல்வது?

நாட்டில் ஆண்டுதோறும் பெய்யும் மழை நீரைச் சேகரித்து, சுத்தமாக்கி பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதும், விவசாயத்துக்கான நீரை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமை. ஆனால், நடப்பது என்ன? "தேசிய நீர்க் கொள்கை' எனும் பெயரில் உள்ளாட்சியின் குடிநீர் விநியோகத்தைக் கூட தனியாருக்குத் தாரை வார்க்கத்தானே நமது மத்திய அரசு துடிக்கிறது? இப்படிப்பட்டோருக்கு இயற்கை நீரின் அழிவைத் தடுத்து அதை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தும் சிந்தனை எப்படி ஏற்படும்?

ஒவ்வொரு விஷயத்திலும் அரசு தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் வகையில் தனியார்மயத்தை அதிகரித்துவருவது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. குடும்பத் தலைவர் தனது வருவாயில் தனது குழந்தைகள் நலனுக்கு, தானே செலவழித்து மகிழ்வதுதானே அழகு? நாட்டின் தலைமைப் பொறுப்பிலிருப்போர், மக்களுக்கான நலத் திட்டத்தை தனியார் பொறுப்பில் செயல்படுத்துவது சரியா என்பதே இப்போதைய கேள்வி.

நாட்டு மக்களுக்கு உணவு, உடை, குடிநீர், வசிப்பிடம் ஆகிய அத்தியாவசியத் தேவையை அரசே வழங்குவது நல்லாட்சிக்கு அடையாளம். கிராம சுயராஜ்யத்தை வலியுறுத்திய மகாத்மா வழிவந்ததாகக் கூறுவோர், கிராமப்புறங்களைக் கூட நகர நாகரீகங்களுக்கு அடிமையாக்கி, வர்த்தக நோக்கில் லாபம் கிடைக்கும் தளங்களாக அல்லவா மாற்றி வருகிறார்கள்? அதன் விளைவே விவசாய நிலங்கள் கூட வீட்டு மனைகளாகின்றன.

உணவையும், இருப்பிடத்தையும் கூட தமது அரசியல் பதவிகளைப் பிடிக்கும் தேர்தல் நேர உத்திகளாகவே அரசியல் தலைவர்கள் கருதுகிறார்கள். அதனால் அரசின் கடமை கூட இலவசங்களாகவே தொடர்கிறது.

நாட்டில் மாதம் மும்மாரிப் (மழை) பெய்து வந்தது; அப்படிப் பெய்த நீரை சேகரிக்க ஏரிகள், கண்மாய்களை அமைப்பது மன்னர்காலத்து அரசின் செயல்பாடாக இருந்துள்ளது. ஆனால், தங்களை சரித்திரப் புருஷர்களாக பாவிக்கும் ஜனநாயகத் தலைவர்களோ, ஏரிகளையும், குளங்களையும்கூட விட்டுவைக்காமல் குடியிருப்புகளாக்கும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளனர். கடலில் கால்வாய் அமைக்கப் போராடுவோர், நிலத்தில் நீர் தேங்கிட இடமின்றிச் செய்ததை மறந்துவிட்டனரோ!

நாட்டில் மழை பெய்வதில் மரங்களின் பங்களிப்பு மிகவும் அவசியம். அது மட்டுமல்ல. மரங்கள் மறைமுகமாக நீரின் சேமிப்புக் கிடங்குகளாகவும் இருந்து வந்துள்ளன. மரங்களிலிருந்து பூமியில் விழும் இலைகள் மண்ணின் மீது படர்ந்து செயற்கையான படலத்தை ஏற்படுத்தும். இப் படலம் அடர்ந்த மலைக் காடுகளில் அரையடிக்கும் மேலாக இருக்கும்.

மழையாக பூமியில் இறங்கும் நீரானது மண்ணிற்குள் பாதியும், மக்கிப் போன இலைகளுக்குள் மீதியும் ஒளிந்திருக்கும். இலைகளுக்குள் ஒளிந்திருக்கும் நீர் சிறுகச்சிறுக வெளியேறுவதால் ஓடைகள் உருவாகும். அந்த ஓடைகள் ஒருங்கிணைந்தால் ஆறாகும்.

மழைப் பிரதேசங்களில் பாறைகளுக்கு மேலாக உள்ள மண் எப்போதும் குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே நீரைச் சேமிக்கும் தன்மையில் இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் அந்த மண்மீது படிந்த இலைப் படலமே நீரைப் பஞ்சுபோல சேமித்து மலைதேசத்து மண்ணைப் பாதுகாக்கும் என்கிறார்கள் தாவரவியல் ஆய்வாளர்கள்.

ஆனால், சமீப காலமாக மலைப் பிரேதசங்களில் தொழில் வளர்ச்சி எனும் பெயரில் மரங்களை வெட்டிவிட்டோம். இதனால் மழைக் காலத்தில் தண்ணீரைத் தாங்கி பூமியைக் காக்கும் இலைப்படலம் இல்லாமலேயே போய்விட்டது. இலைகளுக்குள் தேங்க இடமின்றி மழை நீர் முழுதும் மலை மண்ணின் மீதே தேங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இதனால் அதிகப்படியான நீரைத் தேக்கிவைக்க இயலாமல் மண் சரிவு ஏற்படுகிறது. மண் சரியும்போது அதைச் சார்ந்திருக்கும் மனிதர்கள் மட்டுமல்ல, தவறிழைக்காத மரங்களும் கூட சரிந்துவிடுகின்றன.

மக்கள் நலனுக்காக பெரு நதியின் போக்கை திசை மாற்றுகிறது சீனா. ஆனால் நாமோ, இயற்கை தரும் நீர் வளத்தை மக்கள் நலனுக்காக இணைக்கும் திட்டத்தைக் கூட செயல்படுத்திட யோசிக்கிறோம்.

குடிமக்களாகிய நாம் இயற்கையின் பேரிடரைத் தவிர்க்க நமது சுயநலத்தால் செய்த தவறை உணர்ந்து அதை வருங்காலங்களில் தவிர்க்க முன்வருவது அவசியம். அப்படிச் செய்தாலே "மழை பெய்தால் அழிவு...பொய்த்தால் அவதி...இதுதான் எங்கள் தலைவிதி' என்ற புலம்பல் நிற்கும். இல்லாவிடில், அவலங்கள் தொடர்கதையாகி அது பேரழிவுக்கே வழிவகுக்கும்!

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**09.07.2013**

### மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம், எள் வருகை

சின்னசேலம்:சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம், எள் முட்டை வரத்து அதிகரித்தது.

சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 230 மக்காச் சோளம் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. அதிகபட்சம் ரூ.1,563க்கும் குறைந்த பட்சம் ரூ.1,527க்கும் விலை போனது. நேற்று 10 எள் மூட்டைகள் வந்தது. அதிகபட்சம் ரூ.6,087க்கும், குறைந்தபட்சம் ரூ.5,423க்கும் விலை போனது.

கடந்த வாரம் 420 மக்காசோளம் மூட்டைகள் 6 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய்க்கும், 30 மூட்டை எள் ஒரு லட்சத்து 57 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர்.

### நிலத்தடி நீர்மட்டம் குறைந்தததால் கிணற்றை ஆழப்படுத்தும் விவசாயிகள்

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்ற கூடுதல் பணம் செலவிட்டு கிணறுகளை ஆழப்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பருவமழை கடந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு மழை கொடுக்காமல் ஏமாற்றியதால் தியாகதுருகம் பகுதியில் ஏரி, குளங்கள் நிரம்பவில்லை.

நீர்மட்டம்

நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்து அதல பாதாளத்திற்கு சென்றது. இது கிணற்று பாசனத்தை நம்பிய விவசாயிகள் கலக்கமடைந்தனர். கிணற்றில் நீர் சுரப்பது குறைந்ததால் பயிர்களை காப்பாற்ற முடியாமல் தவிக்கின்றனர். மணிமுக்தா ஆற்றின் அருகே கிணறுகளில் கூட தண்ணீர் ஊற்றெடுக்காமல் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

ஆழப்படுத்தும் பணி

இதனால் சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்ற கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரே நேரத்தில் பலரும் கிணறு வெட்டும் பணிகளை துவக்கியதால் வேலையாட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு மீட்டர் நீளம், அகலம், ஆழம் வரை கிணற்றை ஆழப்படுத்த குறைந்தது 750 ரூபாய் செலவு ஆகிறது. கடினமான பாறையாக இருந்தால் கூடுதல் பணம் தர வேண்டும்.

அதேபோல் "சைடு போர்' போட ஒரு அடிக்கு 100 ரூபாய் முதல் செலவு செய்து ஊற்று மூலம் தண்ணீர் கிடைக்க விவசாயிகள் முயற்சி செய்கின்றனர். இதனால் 15 அடி வரை கிணற்றை ஆழப்படுத்த 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்ய வேண்டும்.

இத்தனை சிரமப்பட்டு முயற்சி எடுத்த போதிலும் எதிர்பார்த்த அளவுக்கு தண்ணீர் ஊற்றெடுக்காததால் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

தென் மேற்கு பருவ மழை துவங்கி ஒரு மாதமாகியும் எதிர்பார்த்த மழை பெய்யாததால் நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு கிடக்கிறது. இவ்வாண்டும் பருவமழை ஏமாற்றி விடுமோ என்ற அச்சம் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

## புயலால் பாதித்த விவசாயிகளுக்கு இலவச சவுக்கை நாற்றுகள் வழங்கல்

கண்டாச்சிபுரம்:கண்டாச்சிபுரம் அடுத்த அடுக்கம் மத்திய நாற்றங்காலில்,விவசாயிகளுக்கு இலவச சவுக்கை நாற்றுகள் வழங்கப்படுகின்றன.

தானே புயலால் பாதித்த விவசாயிகளுக்கு அடுக்கம் மத்திய நாற்றங்காலில் வளர்க்கப்பட்ட சவுக்கை நாற்றுகள் வழங்கப்படுகின்றன.

விவசாயிகள் சிட்டா மற்றும் அடங்கலைகொண்டு வந்தால் ஒரு, ஏக்கருக்கு 4000 நாற்றுகள் வழங்கப்

படும்.

மாவட்டத்தைச்

சேர்ந்த சூரப்பட்டு, அதனூர், தர்மாபுரி, சிறுவாலை கிராமங்களை தமிழ்நாடு உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தில் தேர்வு செய்து, இப்பகுதி விவசாயிகளுக்கு அடுக்கம் நாற்றங்காலில் வளர்க்கப்படும் தேக்கு, சவுக்கை, மகாகனி, வேங்கை, செம்மரம் போன்ற மதிப்பு மிக்க மரக்கன்றுகளை

இலவசமாக வழங்குவதாக வனச்சரக அலுவலர் இக்பால் தெரிவித்தார். இப்பணிகளை வனக்காவலர்கள் கதிர்வேல், பொன்னுரங் கம், ஆனந்த செல்வகுமார், செல்வம், வேலாயுதம், வனக்காவ லர் பரசுராமன் மேற் கொண்டு வருகின்றனர்.

### குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கத்திரிக்காய் சாகுபடி

திருத்தணி: காய்கறி பயிரில், கத்திரிக்காய் குறைந்த செலவில் அதிகமான வருவாய் தருவதால், விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.

திருத்தணி ஒன்றியத்தில் உள்ள, 27 ஊராட்சிகளில் வசிப்போர் விவசாயத்தையே நம்பி உள்ளனர். தற்போது, மின்தடை மற்றும் போதிய பருவ மழை இல்லாததால், விவசாய கிணறுகளில், நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டது.

**மாற்று பயிர்:** இதனால், விவசாயிகள் நெல் பயிருக்கு பதிலாக, கரும்பு, வேர்க்கடலை, மலர்கள் மற்றும் காய்கறி தோட்டம் போன்ற பயிர்களை செய்கின்றனர். குறிப்பாக, விவசாயிகள் தினமும், வருமானம் பார்க்கும் வகையில் உள்ள பூந்தோட்டம் மற்றும் காய்கறி போன்ற பயிர்களை அதிகளவில் விரும்பி, ஆர்வத்துடன் செய்கின்றனர். திருத்தணி ஒன்றியத்தில் உள்ள ராமகிருஷ்ணாபுரம், தாழவேடு, வேலஞ்சேரி உட்பட, 50க்கும் கிராமங்களில் பெரும்பாலான விவசாயிகள் பூ மற்றும் காய்கறி தோட்டம் அமைத்து உள்ளனர். தினமும், காய்கறிகளை பறித்து, திருத்தணி மார்க்கெட்டில், விற்பனை செய்து, உடனுக்குடன் பணம் வாங்கி செல்கின்றனர். தினமும் பணம் கிடைப்பதால் விவசாயிகள், அதிகளவில் காய்கறி பயிர்களை செய்கின்றனர். தற்போது, காய்கறி பயிரில், குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கத்திரிக்காய் தோட்டம், பெரும்பாலான விவசாயிகள் செய்துள்ளனர்.

**ரூ. 1 லட்சம்:** இதுகுறித்து, ராமகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி லோகநாதன் கூறியதாவது: ஒரு ஏக்கரில் கத்தரிக்காய் பயிரிட்டு உள்ளேன். கத்திரிக்காய் விதைகளை, தனியாக நாற்றங்காலில் விதைத்து, 15 நாட்களுக்கு பிறகு வளர்ந்த செடிகளை, நன்றாக உழுது தயார் படுத்திய நிலத்தில் நட்டேன். பின்னர், இரு முறை களை எடுத்து, பூச்சி கொல்லி மருந்து தெளித்தேன். 25 நாட்களில், செடிகள் வளர்ந்து கத்திரிக்காய் கா#க்கத் தொடங்கியது. குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு, 80 கிலோ முதல், 120 கிலோ வரை கிடைக்கிறது. கத்திரிக்காய் பயிரிடுவதற்கு, ஒரு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் மட்டும் செலவு ஆகிறது. ஆனால், குறைந்த பட்சம் ஏக்கருக்கு, 80 ஆயிரம் ரூபாய் முதல், ஒரு லட்சம் ரூபாய் வரை கிடைக்கிறது. ஆறு மாதக் காலத்திற்கு காய்கள் தொடர்ந்து காய்க்கும்," என்றார்.

## சொட்டுநீர் பாசனத்திற்கு மானியத்துடன் கடனுதவி

திருத்தணி: விவசாயிகளிடத்தில் சொட்டுநீர் பாசனம் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த, வேளாண் துறை, 75 சதவீத மானியத்துடன் கடனுதவி வழங்கி வருகிறது.

வேளாண் துறையினர் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதை செயல்படுத்தி வருகின்றனர். அந்த வகையில், விவசாயிகளிடத்தில், கரும்பு, வேர்க்கடலை, தென்னை, மா மற்றும் காய்கறி தோட்டத்திற்கு, சொட்டு நீர் மூலம் தண்ணீர் பாய்ச்சுவது குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தி, அதற்காக மானியத்துடன் கடனுதவியும் வழங்கி வருகின்றனர்.

இதுகுறித்து, திருத்தணி வேளாண்மை துறை உதவி இயக்குனர் பிரசாத் கூறுகையில், ""திருத்தணி ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு, பெரிய விவசாயிக்கு, 5 லட்சம் ரூபாயும், சிறு, குறு விவசாயிகளுக்கு, 2 லட்சம் ரூபாயும் கடனுதவி வழங்கப்படுகிறது. இதில், அரசு மானியமாக, 75 சதவீதம் அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு,100 சதவீதம் மானியம் வழங்கப்படும். குறைந்த பட்சம்,

இரண்டரை ஏக்கர் முதல், 12 ஏக்கர் நிலமுள்ள விவசாயிகளுக்கு மானியத்துடன் சொட்டு நீர் பாசனத்திற்கு கடனுதவி வழங்குகிறோம். கடனுதவி தேவையான விவசாயிகள், தங்களது நிலத்தின் பட்டா அல்லது சிட்டா அடங்கல் நகல் கொடுத்து, பதிவு செய்தால், தகுதி விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப்படும். ஒன்றியத்தில் உள்ள, 500 ஏக்கருக்கு மட்டும் இந்தாண்டு கடனுதவி வழங்கப்படவுள்ளது," என்றார். விவரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குனர், 94445 53719 என்ற அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு, விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

### பழுதடைந்த கீழ்பேரமநல்லூர் ஏரி மதகு: ஐந்து ஆண்டுகளாக விவசாயம் பாதிப்பு

காஞ்சிபுரம்: கீழ்பேரமநல்லூரில் பழுதடைந்துள்ள ஏரி மதகை சீரமைக்காததால், கடந்த ஐந்து ஆண்டுகளாக, இப்பகுதியில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ்பேரமநல்லூர் ஊராட்சி, உத்திரமேரூர் சாலையில் உள்ளது. இங்குள்ள பெரிய ஏரி, பொதுப்பணி துறையின் பராமரிப்பில் உள்ளது. பாலாற்றில் இருந்து அமைக்கப்பட்டுள்ள வரத்து கால்வாய் மூலம், ஏரி நீர் பெறுகிறது. ஒரே ஒரு மதகை கொண்ட இந்த ஏரியை நம்பி, 250 ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன், ஏரி முழுமையாக நிரம்பியது. அதன்பின் ஒவ்வொரு ஆண்டும், ஏரியில் பாதி அளவிற்கு தான் தண்ணீர் தேங்குகிறது. மதகு அடைப்பு ஏற்பட்டு, பழுதடைந்தது. இதை சரி செய்ய வேண்டும் என, விவசாயிகள், ஐந்து ஆண்டுகளாக கோரிக்கை மனுக்களை கொடுத்தும், பொதுப்பணி துறை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை.

இதுகுறித்து, கீழ்பேரமநல்லூரை சேர்ந்த விவசாயி வெங்கடேசன் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாக, ஒவ்வொரு பருவமழைக்கும் கீழ்பேரமநல்லூர் ஏரி பாதியளவு நிரம்புகிறது. இதை நம்பி, முதல் மடையில் உள்ள, 60 ஏக்கர் விளை நிலங்கள், ஒரு போகம் நெல் பயிரை சாகுபடி செய்யலாம். ஆனால், ஏரியின் மதகு பழுதடைந்துள்ளதால், தண்ணீரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

இதனால், ஏரி நீர் கால்நடைகளுக்கு மட்டும் தான் பயன்பட்டு வருகிறது. பழுதடைந்த மதகை சீரமைக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு

ஸ்ரீபெரும்புதூர்: ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு குறித்த பதாகைகள் வைக்கப்பட்டு உள்ளன. ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியில் உள்ள, 15 வார்டுகளில், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்கு, 210 தெருக்களில், 50 ஆயிரம் குடியிருப்புகள் அமைந்துள்ளன. பேரூராட்சி நிர்வாகம் சார்பில், மழைநீர் சேகரிப்பு குறித்து, பல்வேறு கட்டமாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். மழைநீர் சேகரிப்பு கண்காணிப்பு குழு ஆரம்பிக்கப்பட்டு, வீடு, வீடாக சென்று, மழைநீர் சேகரிப்பின் அவசியத்தையும், அதன் பயன்களையும் தெளிவுபடுத்தி வருகின்றனர். இந்நிலையில், மழைநீர் சேகரிப்பு குறித்த, விழிப்புணர்வு பதாகைகள், பேரூராட்சி எல்லைக்கு உட்பட்ட பேருந்து நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், கோவில் வளாகம் என, மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதில், மழைநீர் சேகரிப்பு மேற்கொள்வது குறித்தும், மழைநீர் சேகரிப்பால், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழிவகுக்கும் எனவும், மழைக் காலங்களில், வீணாக செல்லும் மழைநீரை சேமிப்பதன் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி கடும் சரிவு : வளைகுடா நாடு தடை விதிப்பே காரணம்

நாமக்கல்: நாமக்கல் மாண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்வது, கடும் சரிவை சந்தித்துள்ளது. அதனால், பண்ணையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.நாமக்கல் மண்டலத்தில், 1,100க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. அவற்றில், நான்கு கோடிக்கும் அதிகமான முட்டையின கோழிகள் வளர்க்கப்படுகிறது. அதன் மூலம், தினமும், 3.50 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது.அதில், கேரளாவுக்கு, 90 லட்சம், தமிழக அரசின் சத்துணவு திட்டத்துக்கு, 50 லட்சம் முட்டைகள் அனுப்பப்படுகிறது. மற்ற

முட்டைகள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு, சில்லறை விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தற்போது, அதே நிலை நீடித்தாலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தினசரி முட்டையின் அளவு, வெகுவாக குறைந்துள்ளது.இது, பண்ணையாளர்களை கவலை அடையச் செய்துள்ளது. கடந்த, ஜனவரியில், நாமக்கல் மண்டலத்தில் இருந்து, 3.16 கோடி முட்டைகள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அது, ஃபிப்ரவரி மாதம், 56 லட்சமாக குறைந்தது. தொடர்ந்து படிப்படியாக அதிகரித்து வந்த ஏற்றுமதி, கடந்த மாதம், 42.51 லட்சமாக சரிவடைந்தது. கடந்த, மே மாதத்தை ஒப்பிடும்போது, நான்கு மடங்கு குறைந்துள்ளது. அதனால், பண்ணையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மத்திய அரசு தலையிட்டு, இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகண்டால் மட்டுமே, முட்டை ஏற்றுமதியை அதிகரிக்க முடியும்.இது குறித்து ஏற்றுமதியாளர்கள் சிலர் கூறியதாவது:உலக சுகாதாரத்துறை உறுப்பு நாடுகளாக உள்ள ஈரான், ஈராக், குவைத் உள்ளிட்ட நாடுகள், இந்திய முட்டைக்கு, ஏற்கனவே தடைவிதித்துள்ளது. சமீபத்தில், ஓமன் நாடும், இந்திய முட்டைக்கு தடை விதித்துள்ளது. அதனால், இந்தியாவில் இருந்து ஆப்பிரிக்கா, பக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்கு மட்டுமே முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.அதன் காரணமாகவே, ஏற்றுமதி குறைந்ததற்கு முக்கிய காரணம். மேலும், சர்வதேச சந்தையை ஒப்பிடும்போது, இந்திய முட்டையின் விலை அதிகமாக உள்ளது. அதுவும், ஏற்றுமதி பாதிக்க காரணமாக அமைந்துள்ளது. மத்திய அரசு, வளைகுடா நாடுகுள் விதித்துள்ள தடையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், இந்தியாவில் இருந்து முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிக்கும் அபாயம் உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 09.07.2013

### பருப்பு இறக்குமதிக்கு வரி விதிக்க முடிவு



புதுடெல்லி : பருப்பு வகைகள் இறக்குமதி மீது 7.5 சதவீத வரி விதிக்க மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. பருப்பு மற்றும் பயறு வகைகள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் இருந்தாலும், தேவைக்காக ஆண்டுதோறும் 30 லட்சம் டன் வரை இறக்குமதியும் செய்யப்படுகிறது. கடந்த 2006ம் ஆண்டில் இருந்து இவற்றின் இறக்குமதி மீது வரி விதிக்கப்படவில்லை.

தற்போது உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், குறைந்தபட்ச ஆதார விலை உயர்ந்துள்ளதாலும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருப்பு வகைகள் விலை மலிவாக உள்ளன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பருப்பு இறக்குமதி மீது 10% வரி விதிக்க வேளாண்மை பொருள்கள் விலை நிர்ணய கமிஷன் பரிந்துரைத்தது. ஆனால், 7.5% வரை வரி விதிக்கலாம் என மத்திய உணவு அமைச்சகம் கூறியுள்ளது. எனவே, பருப்பு இறக்குமதி மீது 7.5% வரி விதிக்கப்படலாம் என தெரிகிறது.

**மேட்டூர் நீர்மட்டம் 56 அடியை தாண்டியது**



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 56.34 அடியாக உயர்ந்துள்ள நிலையில், நீர்வரத்து 30 ஆயிரம் கன அடியாக குறைந்துள்ளது. கடந்த இரண்டு நாட்களில் நீர்மட்டம் 8.73 அடி உயர்ந்துள்ளது.காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கபினி முழு கொள்ளளவை எட்டி உள்ளதால் அணைக்கு வரும் நீர் முழுமையாக உபரி நீராக திறந்து விடப்படுகிறது.கடந்த 3 நாட்களுக்கு முன் கபினி அணையில் இருந்து 50 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டது. இந்த நீர் கடந்த 2 நாட்களுக்கு முன் பிற்பகலில் மேட்டூர் அணையை வந்தடைந்தது. அணைக்கு விநாடிக்கு 42 ஆயிரம் கனஅடி அளவிற்கு நீர் வந்ததால் நீர்மட்டம் மளமளவென உயர்ந்தது.

இந்நிலையில், கபினி அணையில் இருந்து தற்போது நீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளதால், நேற்று முன்தினம் மதியத்தில் இருந்து மேட்டூர் அணை க்கு நீர்வரத்து குறைய தொடங்கியுள்ளது.நேற்று முன்தினம் காலை அணைக்கு விநாடிக்கு 41,867 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணிக்கு விநாடிக்கு 30,362 கன அடியாக குறைந்தது. அணையின் நீர்மட்டம் கடந்த 24 மணி நேரத்தில் 3.44 அடி உயர்ந்து 56.34 அடியாக உள்ளது. கடந்த இரு நாட்களில் நீர்மட்டம் 8.73 அடி உயர்ந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 3001 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. நீர் இருப்பு 22.03 டிஎம்சி. அணை விரைவில் நிரம்பி பாசனத்திற்கு நீர் திறக்கப்படும் என

எதிர்பார்த்திருந்த நிலையில், நீர்வரத்து குறைந்து வருவதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**வெண்டை சாகுபடியில் அதிக லாபம் பெற அதிகாரி ஆலோசனை**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்தது. இதனால் ஆடி பட்டத்தில் காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர். காய்கறி பயிரில் முக்கிய பயிராக வெண்டை உள்ளது. வெண்டை சாகுபடி செய்வதற்கு அதிக விலை கொடுத்து விதை வாங்குகின்றனர். தற்போது வீரிய ஒட்டுரக விதைகளை பயன்படுத்துவதுடன் அதிக விலை கொடுத்து விதைகளை வாங்குகின்றனர். அப்படி வாங்கப்படும் விதைகள் தரமுள்ளதாகவும், முளைப்பு திறன் கொண்டதாகவும் இருக்க வேண்டும். 45ஜீ30 செமீட்டரில் நடவு செய்யும்போது ஏக்கருக்கு 29,500 செடியில் இருந்து 30,000 செடிகளை பயிரிட வேண்டும் சரியான முளைப்பு திறன் கொண்ட வெண்டை விதைகளை சாகுபடி செய்தால் அதிக மகசூல் கிடைக்கும். விதைகளை பயிரிடுவதற்கு முன்பு 100 கிராம் விதையை எடுத்து, விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் ^30 செலுத்தி முளைப்பு திறனை பரிசோதனை செய்யலாம். அல்லது தபால்மூலம் அனுப்பி பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**உத்தமபாளையத்தில் காய்கறி சந்தை ஏற்படுத்த விரைவு நடவடிக்கை தேவை**

உத்தமபாளையம்: உத்தமபாளையத்தில் மக்களின் வசதிக்காக வார சந்தை அல்லது தினசரி சந்தை ஏற்படுத்த பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். உத்தமபாளையத்தில் காய்கறி சந்தை, உழவர்சந்தை என எதுவும் கிடையாது. ஆங்காங்கே கடைகளில் காய்கறிகள் விற்கப்படுகின்றன. அவர்கள் விற்கும் விலைக்கே பொதுமக்கள்

வாங்க வேண்டியுள்ளது. மற்ற ஊர்களில் வாரச்சந்தை, உழவர்சந்தை என உள்ளன. இவற்றில் காய்கறிகள், மளிகை சாமான்கள் மலிவு விலையில் கிடைக்கின்றன. இதே போல் உத்தமபாளையத்திலும் வாரச்சந்தை அல்லது உழவர்சந்தை ஏற்படுத்தினால், மக்கள் மலிவு விலைக்கு காய்கறிகள், பழங்கள் மற்றும் மளிகை சாமான்கள் வாங்க முடியும். உத்தமபாளையத்தில் வாரச்சந்தை அல்லது தினசரி மார்க்கெட் ஏற்படுத்த வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர். மக்களின் தேவையை கருதி சமீபத்தில் பேரூராட்சிநிர்வாகம் பைபாஸ்சாலை அருகே வாரச்சந்தை அமைக்க திட்டமிட்டது. சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி சந்தை உருவாக்கும் முயற்சியில் பேரூராட்சி நிர்வாகம் ஈடுபட்டது.

ஆனால் தேசிய நெடுஞ்சாலையோரம் சந்தை அமையவுள்ள இடம் வருவதால் மாவட்ட நிர்வாகம் அனுமதி தரவில்லை. மதுரை மாவட்டம் செக்கானூரணி, உசிலம்பட்டி ஆகிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலையோரம்தான் பல இடங்களில் வாரச்சந்தை கூட்டப்படுகிறது. இதனையெல்லாம் முன்மொழிந்து மாவட்ட நிர்வாகத்துடன் பேரூராட்சி நிர்வாகம் பேசாததால் வாரச்சந்தை அமைக்கும் பணி மறுபடியும் முடங்கி போயுள்ளது.
தற்போது புதிய முயற்சியாக பேரூராட்சிக்கு என சொந்தமாக உள்ள இடங்களில் ஏதாவது ஒரு இடத்தை தேர்வு செய்து தினசரி காய்கறி மார்க்கெட்டை கொண்டு வரலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வு பணியை விரைவில் மேற்கொண்டால் வாரச்சந்தை அல்லது தினசரி சந்தை ஏற்படுத்த முடியும். இவ்விஷயத்தில் பேரூராட்சி நிர்வாகம் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 4 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்காக பெரியவாய்க்காலில் தண்ணீர் திறப்பு

சின்னமனூர்: சின்னமனூரில் 4 ஆயிரம் ஏக்கர் முதல்போக விவசாயத்திற்காக பெரிய வாய்க்காலில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.
கம்பம் பள்ளத்தாக்கில் 15 ஏக்கர் நிலங்களின் பாசனத்திற்காக கடந்த ஜூன் 28ம்

தேதி முதல் முல்லைப்பெரியாற்றில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள வேம்படிகளம், முத்துலாபுரம் பிரிவு, மார்க்கயன்கோட்டை, குச்சனூர், சீலையம்பட்டி உள்ளிட்ட இடங்களில் உள்ள 4 ஆயிரம் ஏக்கர் விவசாய பயன்பாட்டிற்காக, பெரியவாய்க்காலில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், சின்னமனூர் பகுதியில் முதல்போக நெல் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன.

**தேவாரத்தில் பருவமழையில்லை விவசாயம் கேள்விக்குறி**

தேவாரம்: தேவாரம் பகுதியில் பருவமழை சரிவர பெய்யாததால் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது.

தேவாரம் மற்றும் அதனை சுற்றியுள்ள தே.மீனாட்சிபுரம், தே.சிந்தலைச்சேரி, தே.அழகர்நாயக்கன்பட்டி, தே.ஓவுலாபுரம், தே.மேட்டுப்பட்டி உள்ளிட்ட இடங்களில் மானாவாரி, காட்டுச்சோளம், கம்பு, வெள்ளைச்சோளம், மக்காச்சோளம் போன்ற பயிர்களை பயிரிடுவது வழக்கம். கடந்த 2010, 2011ம் ஆண்டுகளில் இப்பகுதியில் பெய்த மழையால் பயிர்கள் விளைச்சல் அமோகமாக இருந்தது. இந்தாண்டு பருவமழை சரிவர பெய்யவில்லை. விதைத்த பயிர்களும் கருகிவிட்டன. மழை இல்லாததால் பல ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. நம்பி விதைத்த பயிர்களுக்கு கடந்த சில வாரங்களாக பெய்த சாரல்மழை ஆறுதலாக இருந்தாலும், அது கனமழையாக பெய்தால் மட்டுமே பயன்கிடைக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டமும் சரிந்துவிட்டது. இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், ‘‘கம்பம் பள்ளத்தாக்கில் பருவமழை வெளுத்து வாங்குகிறது. பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு வயல்களில் நடவு பணி துவங்கி விட்டது. கம்பம் பள்ளத்தாக்கில் எங்கும் பசுமையாக காட்சியளிக்கிறது. வயல்களில் தண்ணீர் அதிகமாக தேங்கிகிடக்கிறது. ஆனால் தேவாரத்தில் மழை சரிவர பெய்யவில்லை. கண்மாய்கள் வறண்ட நிலையில்தான் உள்ளது. தேவாரம் பகுதியில் குறிப்பிடத்தக்க நீர்நிலைகள் இல்லை. தென்மேற்கு பருவமழை கைகொடுத்தால் மட்டுமே விவசாயம் செழிக்கும்,’’என்றனர்.

**உரம் விலை கடும் உயர்வு நெல் விவசாயிகள் அதிர்ச்சி**

கம்பம்: உரம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கம்பம் பள்ளத்தாக்கு நெல் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான சுருளிப்பட்டி, நாராயணத்வேன்பட்டி, கூடலுார், அண்ணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் முதல்போக நெல் நடவுப்பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் இல்லாமல் பெரும்பாலான விவசாயிகள் இரண்டாம்போக நெல் நடவுப்பணியை மேற்கொள்ளாமல் நிலங்களை தரிசாக போட்டிருந்தனர். இந்தாண்டு தென்மேற்கு பருவமழை ஜூன் மாதம் துவங்கி பெய்து வருகிறது. இதனால், அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் 28ம் தேதி முல்லைப்பெரியாற்றில் இருந்து பாசனத்திற்கு தேவையான தண்ணீர் திறந்து விடப்பட்டதால் கம்பம் பகுதியில் உள்ள விவசாயிகள்  முதல்போக நெல் நடவுப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் நெற்பயிருக்கு தேவையான உரங்கள் அனைத்தும் விலை உயர்ந்து விட்டதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இதுகுறித்து விவசாயி சுப்பையா கூறுகையில், “நெல் நடவு செய்யும் போதே பாக்டம்பாஸ் மற்றும் டிஏபி உரங்களை அடியுரமாக இட வேண்டும். அப்போதுதான் பயிர் வளர்ச்சி நல்ல முறையில் இருக்கும். தற்போது டிஏபி 50 கிலோ மூடை ரூ.ஆயிரத்து 300 வரையிலும், பாக்டம்பாஸ் மூடை ரூ.800 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. அதிக விலை காரணமாக விவசாயிகள் பெரிதும் சிரமம் அடைந்து வருகிறோம். விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் மானிய விலையில் உரங்கள் வழங்க அரசு முன்வர வேண்டும்’, என்றார்.

**கோரைப்புற்கள் தட்டுப்பாட்டால் முடங்கும் பாய் நெசவு தொழில் கடையம் அருகே 500 குடும்பத்தினர் தவிப்பு**

கடையம் : கோரைப்புற்கள் தட்டுப்பாட்டால் பாய் நெசவு தொழில் முடங்கி உள்ளது. இதனால் கடையம் அருகே 500 குடும்பத்தினர் தவிப்புக்குள்ளாகி உள்ளனர்.

கடையம் அருகே உள்ள முதலியார்பட்டி கிராமம் கோரைப்பாய் நெசவுத் தொழிலில் பிரசித்தி பெற் றது. இங்குள்ள மக்கள் 3 தலைமுறைகளாக பாய் நெசவுத்தொழிலை செய்து வருகின்றனர். தற்போது கால ஓட்டத்திற்கு ஏற்ப இயந்திரங்கள் மூலம் தொழில் செய்தாலும் நேரடியாகவும் மறைமுகமாக வும் சுமார் 500 குடும்பங்கள் இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பொட்டல்புதூர், ரவணசமுத்திரம், வீராசமுத்திரம் பகுதியிலுள்ள இஸ்லாமிய பெண் கள் பெரும்பாலானோர் பாய் தொழிலையே பிர தான கைத்தொழிலாக செய்து வருகின்றனர்.

தற்போது பாய் தயா ரிக்க தேவையான கோரைப்புற்கள் தட்டுப்பாட்டால் சுமார் 4 மாதமாக தொழில் இல்லாமல் கஷ்டப்பட்டு வருகின்றனர். கோரைப்புற்கள் காவிரி டெல்டாப் பகுதியில் தான் விளைகின் றன. அங்கிருந்து விலைக்கு வாங்கி வந்து இங்கு பாய் தயாரிக்கப்படுகிறது.

டெல்டா பகுதியில் கோரைப்புற்கள் விவசாயம் குறைந்துள்ளதால் இதன் விலையும் பல மடங்கு ஏறியுள்ளது. கடந்த 4 மாதங்களுக்கு முன்பு ஒரு கட்டு கோரைப்புற்களின் விலை ரூ.400ஆக இருந்தது. தற்போது 1,300 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதனால் இத்தொழிலை நம்பியுள்ள சுமார் 500 குடும்பங்கள் வருமானம் இல்லாமல் தவிக்கின்றனர்.

இதுகுறித்து பாய் தொழி லில் ஈடுபட்டு வரும் முதலியார்பட்டியைச் சேர்ந்த ரகுமான் கூறும்போது‘ காவிரி டெல்டா பகுதியில் கோரைப்புற்கள் விவசாயம் குறைந்து விட்டதால் அதன் விலை பன் மடங்கு உயர்ந்து விட்டது. இதனால் உற் பத்தி செலவு அதிகரித்து பாய் விலையும் உயர்ந்து விட்டது. மேலும் கோரைப்புற்கள் கிடைக்காததால் பாய் உற்பத்தி செய்ய முடி யாமல் தொழில் முடங்கி உள்ளது’ என்றார்.

ரவணசமுத்திரம் புதுமனை தெருவைச் சேர்ந்த தொழிலாளர்கள் பாத்திமா, அசன்பீவி கூறு கையில் எங்கள் பகுதியில் பாய் தொழிலைச் சார்ந்தே வாழ்ந்து

வருகிறோம்.

இயந்திரம் மூலம் நெசவு செய்யப்பட்ட பாய்களுக்கு முடிச் சுப்போடுதல் போன்ற பினி ஷிங் வேலை களை நாங்கள் செய்து கொடுப்போம். தற்போது பாய் நெசவு இல்லாததால் 3 மாத காலமாக வருமானம் இல்லை.

எங்களுக்கு வேறு தொழில்கள் தெரியாததால் இதை மட்டுமே வாழ்வாதாரமாக நம்பி வாழ்கிறோம்' என்றனர்.

**பயிர் சேதத்திற்கு நஷ்டஈடு வழங்கவில்லை கலெக்டரிடம் விவசாயிகள் மனு**

நெல்லை, : பயிர் சேதத்திற்கு நஷ்டஈடு வழங்கவில்லையென நாங்குநேரி பகுதி விவசாயிகள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

நாங்குநேரி உன்னங்குளம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் வன்னியராஜ், சிவசுப்பிரமணியன், முரு கன், சங்கரன், அருள்ராஜ், பூதத்தான் உள்ளிட்டோர் கலெக்டரிடம் அளித்த மனு: கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் நாங்குநேரி தாலுகாவில் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகின. இதுதொடர்பாக அதிகாரிகள் கணக்கெடுத்தனர். ஆனால் உன்னங் குளம் பகுதியில் இதுவரை அரசு அறிவித்த நஷ்ட ஈட்டுத்தொகை விவசாயிக ளுக்கு வழங்கப்படவில்லை.

கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சில விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது. ஆனால் கிராம வங்கிகள் மூலம் வழங்கப்படவில்லை. எனவே உன்னங்குளம் பகுதி விவசாயிகளுக்கு உடனே நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**09.07.2013**

**குன்னூர் ஏல மையத்தில் 68 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் 68 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 27க்கான ஏலம் கடந்த 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 20 லட்சத்து 27 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 14 லட்சத்து 77 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 50 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

68 சதவீத தேயிலை விற்பனை

இந்த ஏலத்தில் 68 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. இந்த ஏலத்தில் சுமார் 14 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனை ஆனது.இந்த ஏலத்தில் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 1 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.சி.டி.சி. தேயிலை

தூளின் உயர்ந்த பட்ச விலை 177 ரூபாயாக இருந்தது. ஆர் தோடக்ஸ் தேயிலை தூள் 265 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 70 ரூபாயில் இருந்து 75 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 115 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 75 ரூபாயில் இருந்து 82 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 28க்கான ஏலம் வருகிற 11, 12ஆகிய தேதி களில் நடக்கிறது. இந்த ஏலத்தில் மொத்தம் 20 லட் சத்து 40 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**நாமக்கல்லில், 16&ந் தேதி நடக்கிறது லாபகரமான முறையில் கிடாக்கன்றுகள் வளர்ப்பு பயிற்சி**

நாமக்கல்,

நாமக்கல் வேளாண் அறி வியல் நிலையத்தில் வருகிற 16-ந் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு “லாபகர மான முறையில் கிடாக்கன்று கள் வளர்ப்பு” என்ற தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி நடை பெற உள்ளது. இப்பயிற்சியில் கிடாக் கன்றுகள் பராமரித்தல், நல மற்றும் தீவன மேலாண்மை, கலப்புத் தீவனம் தயாரித்தல் மற்றும் பராமரிப்பு குறைபாடு கள் குறித்த பயிற்சி அளிக்கப் படும். இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலை யில் 7-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வருகிற 15-ந் தேதிக்குள் தங்க ளது

பெயரை கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டு உள்ளது.

**சூளகிரி பகுதியில் அவரை விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி**

சூளகிரி,

சூளகிரி பகுதியில் அவரை விளைச்சல் அமோகமாக உள்ளதை தொடர்ந்து விவசாயி கள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

அவரை விளைச்சல்

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே உள்ளது அனாசந்திரம். இந்த கிரா மத்தை சுற்றி உள்ள பகுதிகளில் அவரை அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அதிக அளவில் விளைச்சல் ஆகி உள்ளது. இதனால் மார்க்கெட்டில் அவரை கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அவரை அதிக விளைச்ச லாலும் அதிக அளவில் மகசூல் கிடைப்பதாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து அந்த பகுதி விவசாயிகள் சிலர் கூறிய தாவது:-

விவசாயிகள் பயன்

கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்த ஆண்டு அவரை விளைச்சல் நன்றாக உள்ளது. இதனால் எங்களுக்கு மார்க் கெட்டிலும் நல்ல விலை கிடைக்கிறது. இதன் மூலம் ஏராளமான விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.